# அம்மா

அம்மா! நான் யார் என்று அறியும் முன்னே,

என்னை முதலில் காதலித்த காதலி நீ தான்!

தவமாய் நானும் உன்னுள் இருந்து,

தலையணைத் தேடி உன் மடிச்சேர்ந்தேன்!

குழவிப்பருவம் கொண்ட எனக்கு

குருதி கொடுத்து தாலாட்டினாய்!

அச்சம் கொண்டு அடைக்கலம் தேடி வந்த எனக்கு,

அரவணைப்பை அடைமழையென பொழிந்தாய்!

பயிலா கலைகள் பல கற்பித்து,

யாரும் அறியா புதையல் என்னை

பொக்கி‘ம் என உருமாற˙றினாய்!

காலங்கள் பல கடந்தபோதிலும்

உன் கண்டிப்போடு கொண்ட காவலும்!

என் மீது நீ கொண்ட காதல் சொல்லும்!

கதைகள் பல கதைத்து,

கனவுகள் பல விதைத்து,

என் மூடிய கதவுகளை உடைத்தவள் நீ!

சாஸ்த்திரம் சடங்குகளின் சிறையில்

இருந்து அவிழ்த்து என்னை

சிற்பம˙ எனச்செதுக்கியவள் நீ!

ச. மஞ்சுளா

21BT02